பக்கங்கள்: 16
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 17 வெள்ளிக்கிழமை 01.01.2021 கதிர் 57

இனி இது ரகசியம் அல்ல!

"கொரோனாவுக்கு வெற்றிலை வைத்து வரவேற்கும் ஒரே நாடு இலங்கைதான்..." – என்று சீற்றத்துடன் கூறினார் எனது தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவர். என்ன, ஏது என்று விசாரித்தேன். இந்தக் கொரோனா நெருக்கடி சமயத்தில்

03



# தீர்வுடன் கூடிய புதிய அரசமைப்பு 2021இல் கனியட்டும்!

## நம்பிக்கையுடன் சம்பந்தன் புத்தாண்டுச் செய்தி

**கொழும்பு,ஜனவரி 01**

**பிறந்துள்ள இந்தப் புத்தாண்டிலாவது எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

03

## சுமந்திரனின் குற்றச்சாட்டுக்கு எழுத்தில் பதில் வழங்குவேன்!

### மாவை கூறுகின்றார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.01

யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியை இழந்தமைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின்

03

## கிராம அலுவலகர்கள் மீது ஒழுங்காற்று விசாரணை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.01

அருவியாற்றில் குளிக்க சென்று கிராம அலுவலகர்கள் மீது மாவட்டச் செயலகம் ஒழுங்காற்று விசாரணை மேற்கோண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

03

## புதிய மேயரின் பஜெட்டை ஆதரிப்பதா? ஆராய்ந்தே தீர்மானம் என்கின்றார் மாவை

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியை இழந்திருந்தாலும்சபையில் தொடர்ந்து வரும் வரவு – செலவுத் திட்டம் உட்பட அனைத்து விடயங்களையும் ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது தொடர்பில் ஆராய்ந்தே தீர்மானம் எடுக்கப்படும்.

03

## மாகாணசபை முறைக்கு அப்பால் செல்ல வேண்டும்!

### கஜேந்திரகுமார் வலியுறுத்து

தமிழ் மக்கள் எதிர்பார்த்த உரிமைகள் எதுவும் மாகாண சபை முறைமை ஊடாக கிடைக்கவில்லை எனவும் இதனால், தானும் மாகாண சபை முறைமையை எதிர்ப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

எனினும் பௌத்த பிக்குகள் மாகாண சபை முறைமைக்கு எதிராக

03




புத்தாண்டு வாழ்த்துக்கள்




வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
முகவர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

# Wish You All Very Happy New Year - 2021





















## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணி கள் என்ற பெயரில் ஒரு தொகையினரைக் கூட்டி வந்த விவகாரம் குறித்துத் தான் அவர் சீறினார்.

உக்ரைனில் இருந்து இந்த சுற்றுலாக் குழுவினரை ஏற்பாடு செய்தவர் யார் தெரியுமா?

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பெரும் சர்ச்சைக்குரியவராகத் திகழ்ந்த – அச்சமயத்தில் ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கான தூதுவராகப் பணியாற்றிய – உதயங்க வீரதுங்கதான். இவர் மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர்.

நல்லாட்சி அரசின் காலத்தில் சர்வதேசப் பொலிஸரால் தேடப்படும் அளவுக்கு பல பணமோசடி வழக்குகள், 'மிக்' விமானக் கொள்வனவு ஊழல் என்று நீண்ட பட்டியல் உண்டு. (இந்த ஊழலை அம்பலப்படுத்த முயன்ற பின்னணியில்தான் 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.)

நல்லாட்சி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறி தலைமறைவானர் உதயங்க. அந்தச் சரித்திரம் எழுதுவதானால் அது ஒரு தனிப்புத்தகமாகும். அவ்வளவு திடுக்கிடும் விவகாரங்கள் அடங்கியது 'மிக்' விமான 'டீல்' மற்றும் விடயங்கள்.

எனினும், ராஜபக்ஷக்களிடம் அதிகாரம் மீளவந்ததும் உதயங்க சுதந்திர மனிதராகி விட்டார்.

அவரே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடன் பல டசின் விமானங்களை உக்ரைனிலிருந்து இலங்கைக்கு கொண்டு வருவேன் என்று சூளுரைத்து விடயத்தை – விவகாரத்தை – ஆரம்பித்தார்.

சுற்றுலாப் பயணிகள் மூலம் நாட்டின் விருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்றால் , பணப் புழக்கத்துடன் பயணிகள் நாட்டுக்குள் வரவேண்டும். நிதிப் புழக்கத்தில் கொழுத்த உல்லாசப் பயணிகள் வந் தால்தான் அத்துறை எழும்பும்.

அந்த விடயத்தில் உதயங்க வீரதுங்க ஏற்பாடு செய்த இந்த சுற்றுலாப் பயணிகள் – மிக, மிக வசதியானவர்கள் என்கின்றார் நண்பரான அந்தத் தென்னிலங்கை ஊடகவியலாளர்.

உக்ரைனில் சில பிரதேசங்கள் சிவப்பு விளக்குக்குப் பெயர் போனவை. மாபியாத் தளங்களும் கூட. அங்கிருந்துதான் பல்லாயிரம் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வந்து இறக்கத் திட்டமிட்டார் அவர்.

பாம்பின் கால் பாம்பு தானே அறியும்..! அதனால் தான் அத்தகைய கொழுத்த காய்களை சுற்றுலாப் பயணிகளாக அவரால் ஏற்பாடு செய்ய முடிந்தது போலும்.

ஆனால் முடிவில், முதல் இரண்டு விமானங்களில் வந்திறங்கிய சில நூறு பயணிகளிலேயே ஆறு பேருக்கு மேல் கொரோனாத் தொற்று. அவர்களுடன் ஒரே விமானத்தில் பறந்து வந்தவர்களின் பாடு சொல்லத் தேவையில்லை..! ஆறு விரைவில் அறுபதானாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்த விபரீதமான ஆரம்பத்துடன் உக்ரைன், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வரும் ஆரவாரம் அடங்கினாலும் அடங்கி விடக் கூடும்.

பார்ப்போம் நடப்பதை.....!

– மின்னல் –

## தீர்வுடன் கூடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மலர்ந்துள்ள 2021ஆம் ஆண்டானது நாட்டு மக்களுக்குச் செழிப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமான ஆண்டாக அமைய வேண்டும்.

இவ்வருடமானது எமது மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும்.

இந்தப் புதிய ஆண்டிலாவது எமது மக்களின் அரசியல் அபிலாகைளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். அதில் முன்வைக்கப்படும் தீர்வானது நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் ஒருமித்த, பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அமையவேண்டும். அதேவேளை, மாகாணங்களுக்கு நேர்மையான ஓர் அதிகாரப் பகிர்வையும் கொண்டிருக்க வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு. எமது இந்தப் பரிந்துரைகளை புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவிடம் சமர்ப்பித்துள்ளோம்.

நாட்டைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. பிளவுபடாத, ஒருமித்த நாட்டுள்ளேயே நாம் தீர்வைக் கேட்கின்றோம். எமது எதிர்கால சந்ததியினருக்கு வளம் மிக்கதும், நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவதுமான ஓர் இலங்கைத் தீவை உருவாக்குவது எமது கடமையாகும்.

எனவே, இந்தப் புத்தாண்டு நாளில் இந்த தலையாய கருமத்தை நிறைவேற்ற இன, மத, கட்சி வேறுபாடின்றி உழைக்க முன்வருமாறு அரசியல் தலைவர்கள், சமய தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் – என்றுள்ளது.

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கும் தனது நிலைப்பாட்டுக்கும் முற்றிலும் வேறுபாடு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாகாண சபை முறைமையில் ஆரம்பத்தில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை. மாகாண சபை முறைமைக்கு அப்பால் சென்ற அதிகார பரவலாக்கலை கொண்ட வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

இதனால், மாகாண சபைக்கு அப்பால் செல்ல வேண்டுமே அன்றி மாகாண சபை முறைமையை ஒழிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு கிடையாது. அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடு. சில இனவாத பௌத்த பிக்குகள் இதனை புரிந்துகொள்ளாது செயற்பட்டு வருவது குறித்து வருத்தப்படுகிறேன்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கு சம உரிமையுள்ள நாடு. சிங்களவர்களை தவிர ஏனைய இன மக்களை சமமான நிலையில் கருத முடியவில்லை என்றால், இந்த நாட்டை இனவாத நாடு என்று அடையாளப்படுத்த முடியும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செயற்பாடுகளே காரணம் என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார் மாவை சேனாதிராசா. அத்துடன் இது தொடர்பில் சுமந்திரனுக்குத் தான் எழுத்தில் பதிலளிக்கவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது சுமந்திரனின் குற்றச்சாட்டக்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றஞ்சுமத்துவது ஒன்றும் புதிய விடயமல்ல. இதற்கு முன்னரும் அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் ஊடக சந்திப்பை நடத்தி தமிழரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் பற்றி பேசியிருக்கின்றார்.

இந்த விடயங்கள் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டிப் பேச வேண்டும். அதேவேளை, சுமந்திரன் குற்றச்சாட்டுக்கு நான் பதிலளிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், பதிலளிக்க வேண்டும்.

இன்றைய ஒரு பத்திரிகையில் ஆசிரியர் என்னை இழிவுபடுத்தி எழுதியதால் அதற்கு நான் பதிலளித்திருக்கின்றேன்.

நாளை (இன்று) புத்தாண்டு. அதை எல்லாரும் கொண்டாட வேண்டும். அதே நேரம் கொரோனாவால் துன்பத்தில் இருக்கின்றனர். ஆகவே, கட்சி மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நாளைக்கு கடிதத்தை எழுதி துன்பப்படுத்த நான் விரும்பவில்லை.

ஆனாலும், இந்தக் குற்றச்சாட்டுக் கடிதம் தொடர்பில் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு பின்னர் அறிக்கை கொடுப்பபேன். ஏனெனில் வருடத்தின் முதல் நாளில் அரசியல் குழப்பங்கள், குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பதில் கொடுக்க நான் விரும்பவில்லை. அதற்கு எனது மனமும் இடமளிக்கவில்லை.

இதேவேளை, யாழ்.மாநகர சபை மேயர் விடயத்தில் நாள் தன்னிச்சையாக எடுத்த முடிவு என்ற குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன். கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆராய்ந்து தான் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதைத்தான் நடைமுறைக்குக்கொண்டு வந்துள்ளோம்.

உறுப்பினர்கள் அனைவரும் ஆனோல்ட்டையே விரும்பினர். அவரையே ஆதரிப்பதென அனைவரும் தீர்மானம் எடுத்திருந்தனர் – என்றார்.

# கொரோனா மரணம் 204

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

நான்கு ஆண்களும், பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூவர் 60 வயதைக் கடந்தவர்கள்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 204 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 191 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய மேயரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்.மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாநகர சபையில் எங்கள் வேட்பாளர் ஆனோல்ட் வெற்றி பெற முடியாத நிலையில் மணிவண்ணனன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதனூடாகப் புதிய மேயர் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் ஆராய்ந்திருக்கின்றோம்.

குறிப்பாக நாங்கள் எதிரணியில் இருக்கின்றோம் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்ப்பதோ அல்லது ஆதரிப்பதோ என்ற நிலைப்பாட்டை எடுப்பதில்லை. குறிப்பாக வரவுள்ள வரவு – செலவுத் திட்டத்தை ஆராய்ந்து அதனை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? எனத் தீர்மானம் எடுப்போம்.

அதேபோல் ஏனைய சந்தர்ப்பங்களில் வருகின்ற பிரேரணைகளின் நன்மை, தீமையை ஆராய்ந்த அதன் பின்னர் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். ஆகையினால் இனிவரும் காலங்களில் சபையின்விடயங்களில்சபைஉறுப்பினர்கள் கட்சித் தலைமையோடு கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்து அதற்கமைய செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## கிராம அலுவலர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அருவியாற்றுப் பாலத்தின் அடியில் சமையல் செய்து வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் ஆற்றில் குளிக்க முற்பட்ட போது 4 கிராம சேவகர்கள் சுழிக்குள் அகப்பட்டனர். இதில் மூவர் மீட்கப்பட ஒருவர் காணாமல் போயிருந்தார்

காணாமல் போன கிராம அலுவலர் சடலமாக மீட்கப்பட்டார். நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தோமஸ் புரி கிராம அலுவலகர் பிரிவில் கிராம அலுவலகராக கடமையாற்றும் ஜனார்த்தனன் (வயது-26) என தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் நான்கு கிராம அலுவலகர்கள் உள்ளடங்களாக 6 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் அருவியாற்றுப் பாலத்தின் அடியில் சமையல் செய்து வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்டமையோடு அதன்போது மது போதையில் இருந்தனர் எனவும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் ஆற்று பகுதியில் குளிக்கச் சென்று பலர் உயிரிழந்துள்ள நிலையில் அருவியாற்றில் குளிப்பது ஆபத்தானது என நானாட்டான் பிரதேச சபையால் எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டுள்ளபோதும் அதனையும் மீறி கிராம அலுவலகர்கள் உள்ளடங்களாக 6 பேரும் ஆற்றில் குளிக்கச் சென்றமை –

அத்துடன் பௌர்ணமி தினத்தில் மது அருந்தியமை மற்றும் அன்றைய தினம் கடமை தினமா என்பவை உள்ளிட்ட விசாரணைகளை மேற்கொள்ளவே மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தமிழ்ச் சாதியின் தலையெழுத்து

அரசியல் என்பதே அனுபவப் பாடத்தில் கட்டி எழுப்பப்படுவது தான். கற்றுக் கொண்ட பட்டறிவில் இருந்து எதிர்காலத்தைச் சரியாக வடிவமைத்துக் கொள்ளாதவன் ஒரு நல்ல அரசியல் தலைவனே அல்லன்.

*'இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி'* என்றார் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

வரலாறு எமது வழிகாட்டி. கடந்த கால வரலாறு மட்டுமல்ல, அண்மைக்கால வரலாறு மட்டுமல்ல, சமாந்தரமாக நடந்து கொண்டிருக்கும் சமகால நிகழ்வுகளும் கூட எமக்கு ஏதோ ஒரு பாடத்தைப் போதிப்பனதான்.

நம் மத்தியிலே – தமிழர்கள் இடையே – பல கட்சிகள் இன்று. கட்சிகள், அணிகள், குழுக்கள், இயக்கங்கள், அமைப்புகள் என்று நாம் பிளவுபட்டு, பிரிவுண்டு, முட்டி மோதியபடி நிற்கின்றோம்.

பிரிவால், பிளவால் நாம் நலிந்து போய் நிற்கின்றோம். சமூகச் சிற்பி – சமுதாய வழிகாட்டி – செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், இப்படி நாம் பிரிவுற்று நலிந்து கிடக்கின்றமையைத் தமது புத்தாண்டுச் செய்தியில் ஆற்றாமையுடன் – ஆதங்கத்துடன் – விசனத்துடன் – சுட்டிக்காட்டுகின்றார்.

*"எங்கள் தமிழ் இனத்திடம் ஒற்றுமை என்பது கிடையாது. இதனால் நாம் இழந்தவை ஏராளம். தன்தன் சுயலாபத்திற்காகப் பல்வேறு கட்சிகள், பல்வேறு குழுக்கள் எனத் தோற்றம் பெற்றுக் காலம் வீண் விரயமாகின்றது. எவரும் வெளிச்சத்தில் இல்லை. எவரிடமும் சத்தியத்தைக் காண முடியவில்லை. பிறக்கும் புதிய ஆண்டிலாவது எங்கள் இனத்திற்கு நல்ல விமோசனம் கிடைக்க வேண்டும் என்று கடவுளிடம் மன்றாடுவோம்."* – இப்படிக் கூறியிருக்கின்றார் ஆறு திருமுருகன்.

பிளவும் நலிவும் பிரிக்க முடியாத விடயங்கள். அதன் விளைவைத்தான் எமது இனம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழரைப் பிளந்து, பிரித்து, சிதைத்து வைத்திருக்கும் தரப்புகள் – எமது அரசியல் தலைவர்கள் – கடந்த காலத்தையும், சம காலத்தையும் ஒரு தடவை திரும்பிப் பார்த்து நோட்டமிட வேண்டும்.

சுதந்திர இலங்கையின் முதல் எழுபத்தியொரு ஆண்டுகள் மாறி மாறி அதிகாரத்தை வைத்திருந்தவை தென்னிலங்கையின் மிகப் பெரிய இரண்டு சிங்களக் கட்சிகள்.

அவற்றைச் சுற்றிக் கூட்டிணைந்த கட்டமைப்புகள், கூட்டணிகள், முன்னணிகள் தாம் மாறிமாறி அதிகாரத்துக்கு வந்தன. ஆட்சிப் பீடங்களில் அமர்ந்தன. நாட்டில் அரசோச்சின.

அவை இரண்டும் இப்போது எங்கே? வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசும் பேரவல நிலையில் அவை.

2019 வரை ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் இப்போது நாடாளுமன்றத்தில் இல்லை. துடைத்து, வழித்து நாடாளுமன்ற அரசியலில் இருந்து அது தூர வீசப்பட்டு விட்டது.

இலங்கையில் உள்ள மாவட்டங்கள் தோறும் ஆங்காங்கே சொற்பமாகக் கிடைத்த வாக்குகளை சேர்த்துக் கூட்டிப் பிரித்துப் பார்த்ததில் தேசியப்பட்டியலில் ஓர் எம்.பியைப் பெறும் வாய்ப்பு மட்டுமே அதற்குக் கிடைத்தது. அதற்குக் கூட ஒருவரை நியமிக்க முடியாத இழுபறி கட்சிக்குள். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்ட ஐ.தே.கட்சிக்கு ஏற்கனவே உடைந்து, கிளறி, சின்னாபின்னமாகி விட்ட அக்கட்சியின் நிலைமையை மேலும் தமக்குள் சண்டையிட்டு சிதறடிக்கும் சூழ் நிலையை, 'வராது வந்த மாமணி' போல கிட்டிய அந்த ஒரேயொரு எம்.பி.பதவி வழங்கிற்று. தேர்தல் முடிந்து நான்கைந்து மாதம் கடந்தும் அந்த எம்.பி. பதவி யாருக்கு என்ற உள் வீட்டுச் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடாகவில்லை. அவ்வளவு முரண்பாடு.

இதே நிலைமைதான் மற்றைய பிரதான கட்சியான சு.கவுக்கும். ஏதோ ஆளும் கட்சியாக அதிகாரத் தரப்பில் இருக்கும் மொட்டுக் கட்சியினருடன் ஒட்டி இருக்கின்றமையால் கடந்த தேர்தலில் 14 ஆசனங்கள் கிடைத்தன. இல்லையேல் அதுவும் கந்தல்தான்.

இத்தகைய சமகால பட்டறிவுகளைப் பார்த்துப் படித்தும் கூட நம் தமிழர் தரப்பு திருந்துவதாக இல்லை.

கிழக்கில், பிள்ளையானின் கட்சி, கருணாவின் கட்சி, வியாழேந்திரன் தரப்பு என்று தமிழர் பிரிந்து, அத்தரப்புகள் ஊதிப் பெருக்கும் நிலைமை, தமிழர் தேசியம் நலிவுறும் இக்கட்டு.

வடக்கில் நிலைமையோ மோசத்திலும் மோசம். ஏற்கனவே சுரேஷ் பிறேமச்சந்திரன், அனந்தி சசிதரன், நீதியரசர் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், சிவகரன் என்று உள்ளேயிருந்த பலரை சில தலைவர்களின் சுயநலத்துக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஒவ்வொருவராகக் கலைத்தாயிற்று.

ஒரு காலத்தில் 22 எம்பிக்களை வைத்திருந்த தமிழர் தேசியத்தை வெற்றிகரமாகப் பத்துக்கு 'வீக்' ஆக நலிவடையச் செய்து விட்டோம்.

தங்களின் சுய நல அரசியலுக்காகவும், தங்களைச் சேர்ந்தோரின் நலனுக்காகவும், இருக்கின்ற எச்ச சொச்சப் பிரமுகர்களையும் கலைக்கும் திருகுதாளத்தைத் தொடருவது அப்பட்டமாக வெளிப்படுகின்றது. மக்களால் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டவர்கள் தாம் சார்ந்த கட்சிகளையும் கட்டமைப்புக்களையும் சேர்த்துக் குப்பைக் கூடைக்குள் கடாசி விட்டுத்தான் ஓய்வார்கள் போலும்...!

*'விதியே, விதியே, தமிழ்ச்சாதியை என்செய நினைத்தாய் எனக்குரை யாமோ?'*

# அரசியல் பழிவாங்கலில் அரசு ஈடுபட்டிருந்தால் இன்று பலர் சிறைகளிலேயே இருந்திருப்பார்கள்!

### பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண தெரிவிப்பு



குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர போன்றோர் எவ்வாறு தமது சேவையை ஆற்றினார்கள் என்பதை முழு நாடும் அறியும். தற்போதைய அரசாங்கத்தில் யாரும் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படவில்லை.

அவ்வாறு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டிருந்தால் பெருமளவானோர் இன்று சிறைகளிலேயே இருந்திருப்பார்கள் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஜெனரல் நிலைக்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை தலதா மாளிகைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஷானி அபேசேகர போன்றோர் எவ்வாறு தமது சேவையை ஆற்றினார்கள் என்பதை முழு நாடும் அறியும். நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் பழிவாங்கலுக்குச் செல்லவில்லை. நாம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டிருந்தோமானால் இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் சிறைகளிலேயே இருப்பார்கள். ஆனால் நாம் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. நிரூபிக்கப்பட்ட விடயங்களாலேயே அவர்கள் சிறையிலுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் இதற்கு முன்னர் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேச்சுகளை முன்னெடுத்து அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் போது கொவிட் சடலங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், கொவிட் சடலங்கள் தொடர்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பது இன்றைய சூழலில் அபாயமானதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சுகாதார தரப்பினரே தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் குழுவை அமைத்து அதனை அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கமையவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. – என்றார்.

# ஊடக அடையாள அட்டை செல்லுபடிக் காலம் நீடிப்பு

ஊடகவியலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலம் 2021 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ வினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

2021 ஆம் ஆண்டுக்கான ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கான அடிப்படை அலுவல்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி 2205/17 இலக்கத்தின் கீழான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பப் பத்திரம் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

இதே போன்று 2020 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலம் 2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக மேலும் அறிவிக்கின்றோம்.

## இரத்தினபுரி வைத்தியசாலை விடுதி ஒன்று தற்காலிக பூட்டு!

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் வைத்தியர் உள்ளிட்ட 5 ஊழியர்கள் மற்றும் 9 நோயாளர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வைத்தியசாலையின் விடுதியொன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வைத்தியர், இரண்டு தாதியர், கனிஷ்ட சேவை பிரிவின் இரு ஊழியர்கள் மற்றும் 9 நோயாளர்கள் என மொத்தமாக 14 பேர் இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தம்மிக்கவின் பாணிக்கு கிடைத்தது அனுமதி!

கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத ஔடதத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கேகாலையை சேர்ந்த தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத ஔடதத்துக்கே இவ்வாறு ஆயுர்வேத ஒழுக்க விதிகள் குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி 5 நாள்களுக்கு தனிமைப்படுத்த உத்தரவு!

மட்டக்களப்பு – காத்தான்குடி பகுதியை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொவிட் – 19 தொற்றை கட்டுப்படுத்தும் தேசிய செயலணிக்கு அறிவித்துள்ளதாக அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், காத்தான்குடி பகுதியை எதிர்வரும் 5 நாள்களுக்கு தனிமைப்படுத்துவது தொடர்பில் பரிந்துரை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி நள்ளிரவு 12 மணி தொடக்கம் ஐந்து நாள்கள் காத்தான்குடி தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியை சேர்ந்த ஐம்பது பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரியகல்லாறில் எந்தவித அதிகரிப்பும் இதுவரையில் காணப்படவில்லையெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவைத் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு தனிமைப்படுத்தல் பகுதியாக வைத்திருப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதாகவும் இதனை உடனடியாக தேசியக் கொரோனா செயலணிக்கு பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று நோயாளர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்றும் எனவே மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சுயமாக சிந்தித்து சுயமாக சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றவேண்டும்.– என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# சவால்களை எதிர்கொள்வதற்கு புத்தாண்டில் ஒன்றிணைவோம்!

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் அழைப்பு

நாடு எதிர்கொண்டுள்ள இந்த சவால்களை மலர்ந்துள்ள புத்தாண்டில் நாம் ஒன்றிணைந்து வெற்றிக் கொள்ள முடியும்.

இவ்வாறு தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சுபீட்சத்திற்கான எதிர்பார்ப்புகளுடன் மலர்ந்துள்ள 2021 புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வாழ்த்துக்களை பகிர்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாதுகாப்பான தேசத்திற்காக எமது தாய்நாட்டின் எதிர்காலம் குறித்து மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையை அன்புடன் நினைவுகூருகின்றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலமே ஆன போதிலும், அக்காலப்பகுதியை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக செலவிடக்கூடியதாக அமைந்தமை குறித்து பெருமை கொள்கின்றோம்.

ஐந்து வருட காலமாகத் தடைப்பட்டிருந்த நாட்டின் மனிதவள மற்றும் பௌதீக அபிவிருத்தி செயற்பாடுகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எமக்கு முடியுமானதாயிற்று. மக்களுக்கு அதனை கண்டு மகிழ்ச்சியடைய முடியும்.

கொவிட் - 19 வைரஸின் சவாலுக்கு உலக நாடுகள் போன்றே நாமும் முகங்கொடுத்து வருகின்றோம்.

வைரஸின் தாக்கத்தை குறைப்பதற்கு வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார், பாதுகாப்புப் படையினர், அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் 24 மணி நேர அர்ப்பணிப்பு மிகுந்த சேவை அளப்பரியது.

கொவிட் - 19 தொற்று காரணமாக மக்கள் மீது சுமைகள் சுமத்தப்படாதிருக்கும் வகையில் உச்ச தலையீட்டுடன் அரசாங்கம் பங்களிப்பு செலுத்திவருகிறது. சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றும் ஒழுக்கம் மிகுந்த பொதுமக்களின், அரசாங்கத்திற்கான ஆதரவும் அளப்பரியதாகும்.

நாடு எதிர்கொண்டுள்ள இந்த சவால்களை மலர்ந்துள்ள புத்தாண்டில் நாம் ஒன்றிணைந்து வெற்றிக் கொள்ள முடியும். உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் அரச பொருளாதார கொள்கை திட்டத்தினூடாக நாட்டிற்குள் புதிய பொருளாதார மற்றும் அபிவிருத்தி புரட்சி ஏற்படும் என்பது உறுதி.

அதன் மூலம் உங்களதும், நாட்டினதும் எதிர்காலம் சாதகமான முறையில் வளர்ச்சியடையும் ஒரு சுபீட்சமான தேசம் உருவாகும். மிகக் குறுகிய விடயங்கள் காரணமாக நாம் இனிமேலும் வேறுபாடுகளுடன் காணப்படக் கூடாது.

எமது எதிர்கால தலைமுறையினரின் எதிர்காலத்திற்காகவே இன்று நாம் இத்தாய்நாட்டிற்காக கடினமாக உழைத்து எம்மை அர்ப்பணித்து வருகின்றோம். எனவே சமூக கலாசார மற்றும் மத சகவாழ்வுடன் செயற்படுவதன் மூலம் இலங்கையர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு மலர்ந்துள்ள இப்புத்தாண்டை ஒரு வாய்ப்பாக்கிக் கொள்ளுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்ந்துள்ள இவ்வருடம் அனைவருக்கும் சுபீட்சம் மிகுந்த புத்தாண்டாக அமைய பிரார்த்திக்கின்றேன். - என்று உள்ளது.

# அறிவியல் மற்றும் ஆத்மீக ரீதியாக ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம்

## இந்துசமயப் பேரவை தலைவர் புதுவருடச் செய்தி

கொரோனாத் தொற்றிலிருந்து மீள்வதற்கு அறிவியல் ரீதியாகவும், ஆத்மீக ரீதியாகவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வோமாக.

இவ்வாறு தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார் இந்துசமயப் பேரவை தலைவர் ஈசான் சி. சக்திகிரீவன். அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

உலக நடைமுறையில் ஆங்கிலப் புத்தாண்டும் எமது நாளந்த செயற்பாடுகளோடு இணைந்து விட்டதால் இதனையும் வரவேற்று அனைவரையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த ஆண்டு உலகத்தையே இருண்ட யுகமாக்கியுள்ள கொரோனாத் தொற்று அனைவரையும் ஆட்டிப்படைத்து வருகின்றது. இதிலிருந்து மீள்வதற்கு அறிவியல் ரீதியாகவும் , ஆத்மீக ரீதியாகவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வோமாக.

தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடிவருவதும் , போரால் பாதிக்கப்பட்ட மக்கள் துன்ப துயரங்களுக்கு மத்தியில் வாழ்வதும் எம்மவர் உள்ளங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இந்த நிலை நீங்கக் கூடிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்போமாக.

நாமனைவரும் கடந்த காலத்தில் ஏற்பட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டு புதிய உத்வேகத்துடன் மகிழ்ச்சிகரமான ஆண்டாக இவ்வாண்டில் பிரவேசிக்க, எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானை பிரார்த்திப்போமாக.- என்று உள்ளது.

# பேரழிவுகளும் இனத்துவேஷமும் இல்லாத ஆண்டாக மலரட்டும்!



## சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் செய்தி

வன்முறையும் துவேஷமும் இல்லா தொழிந்து மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வழிபிறக்கும் ஆண்டாக 2021அமைய வேண்டும் என்பது எமது பேரவா. இயற்கைப்பேரழிவுகளும் இனத்துவேசமும் இல்லாது ஒழிய வேண்டும் என்பதும் எமது பெருவிருப்பம்.

இந்துமதகுரு பீடாதிபதியும், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவும், தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தமது புதுவருடச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அச்செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மங்களகரமான புத்தாண்டு மலர்கின்றது. ஆண்டுக்கு ஆண்டு விடியலை எதிர்நோக்கிக் காத்திருக்கும் எமக்கும் எம்இனத்திற்கும்புதியவிடியலைவழங்க 2021ஆம் ஆண்டு பிறக்கிறது. கழிந்த ஆண்டில் எம்மை மட்டுமன்றி உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொவிட் 19 வைரசின் தாக்கம் சொல்லும் தரமன்று. புதிதாகப் பிறக்கும் 2021ஆம் ஆண் டிலேனும் அதன் தாக்கமும் தீங்கும் தனிந்து நாம் பெருமூச்சு விட ஒரு வாய்ப்பை வழங்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதொன்றே எம்மால் செய்யக்கூடிய ஒரு செயவாகும்.

வன்முறையும் துவேஷமும் இல்லா தொழிந்து மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வழிபிறக்கும் ஆண்டாக 2021அமைய வேண்டும் என்பது எமது பேரவா. இயற்கைப் பேரழிவுகளும் இனத்துவேசமும் இல்லாது ஒழிய வேண்டும் என்பதும் எமது பெருவிருப்பம்.

எல்லார்க்கும் இன்பமும், சந்தோஷமும், சுபீட்சமும் கிடைக்க இறைவன் வழிசமைப்பான் என்ற நம்பிக்கை அடிநாதமாக அமைய மங்களகரமான புத்தாண்டை கரங்கூப்பி வரவேற்போமாக. - என்று உள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியற் கைதிகள் இரண்டு தொடர்பிலும் விரைந்து செயற்படுங்கள்



## அரசை வலியுறுத்துமாறு புத்தாண்டுச் செய்தியில் யாழ் ஆயர் கோரிக்கை

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையும் அரசியற் கைதிகள் விடயமும் இன்னும் அரசால் தீர்க்கப்படாமலும் கவனிக்கப்படாமலும் உதாசீனம்செய்யப்பட்டும்வருவதுவேதனைக்குரியது. அரசியற் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் இந்த விடயத்தில் இன்னும் அதிக கவனம் செலுத்தி அரசை செயற்பட வலியுறுத்த வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்."

- யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு கோரியிருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2021ஆம் புதிய ஆண்டு மலருகின்றவேளை இப்புத்தாண்டைகொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு இறை ஆசீரையையும் மன மகிழ்வையும் பாதுகாப்பையும் தரும் ஆண் டாக அமையட்டும் என வாழ்த்துகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் ஆண்டு முழுவதிற்குமான அன்னையின் விசேட ஆசீயைப் பெற பணித்து நிற்கிறது. இறைவனின் அன்னை மரியாள் தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து எத்தீங்குமின்றி வழிநடத்தி எம் அனைத்துத் தேவைகளிலும் எம்மை நிறைவு செய்வாராக.

கடந்த ஆண்டு பல இன்ப துன்ப அனுபவங்களை நாம் பெற்று ஏற்றுக் கொண்டுள்ளோம். வருகின்ற புதிய ஆண்டிலும் இறைவன் தர இருக்கின்ற இன்ப துன்ப அனுபவங்களை இறை சித்தமாக ஏற்றுக் கொள்வோம்.

2020ஆம் ஆண்டு அனைவருக்கும் ஒரு துன்பமிக்க ஆண்டாகவே கடந்துசென்று உள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்களால் இலங்கையிலும், கொரோனா தொற்றால் உலகம் முழுவதிலும் பெரும் துயரம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் முடிவில்லாமல் கொரோனாத் தொற்று போய்க்கொண்டே உள்ளது. அதனைவிட இன்னும் வேறு வகை கொரோனா வைரஸ் பரவுகிறது என்ற செய்தி பயமூட்டுவதாகவே உள்ளது.

எமது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்த கருத்தை திரும்பவும் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம். இறைவன் உலக மக்கள் அனைவரையும் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாத்து இந்த தொற்று நோய் உலகில் இருந்து முற்றாக அகல வேண்டுமென பிரார்த்தியுங்கள். செபத்தால் மட்டுமே இந்த தொற்றுநோயை நீக்க முடியும் என நம்பி மத பேதமின்றி இறைவேண்டுதல் செய்யுங்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையும் அரசியற் கைதிகள் விடயமும் இன்னும் அரசால் தீர்க்கப்படாமலும் கவனிக்கப்படாமலும் உதாசீனம் செய்யப்பட்டும் வருவது வேதனைக்குரியது. அரசியற் தலைவர்களும் சம்பந்தப்பட்டவர்களும் இந்த விடயத்தில் இன்னும் அதிக கவனம் செலுத்தி அரசை செயற்பட வலியுறுத்த வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

2021ஆம் புதிய ஆண்டு அனைவருக்கும் இறை ஆசீயையும் மனமகிழ்வையும் பாதுகாப்பையும் தரும் ஆண்டாக அமையட்டும் என இறையாசீர் வேண்டுகிறோம். - என்று உள்ளது.



# ஒற்றுமையின்மையால் இழந்தவை ஏராளம்; புத்தாண்டில் விமோசனம் கிட்டட்டும்!

## செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் செய்தி

"எங்கள் தமிழ் இனத்திடம் ஒற்றுமை என்பது கிடையாது. இதனால் நாம் இழந்தவை ஏராளம். தன்தன் சுயலாபத்திற்காக பல்வேறு கட்சிகள், பல்வேறு குழுக்கள் எனத் தோற்றம் பெற்று காலம் வீண்விரயமாகின்றது. எவரும் வெளிச்சத்தில் இல்லை. எவரிடமும் சத்தியத்தை காண முடியவில்லை. புதிய ஆண்டில் கடவுளிடம் மன்றாடுவோம் – எங்கள் இனத்திற்கு நல்ல விமோசனம் கிடைக்க வேண்டும் என்று!"

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் இவ்வாறு தெரிவித்தார். தாம் விடுத்த புத்தாண்டுச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனித வாழ்வு மகத்தானது. இந்த இனிய வாழ்வை நாம் புனிதமாக பேண வேண்டும். அன்பினால், பண்பினால், பரிவினால், தொண்டினால் ஆனந்தமாக வாழ அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

புதிய ஆண்டில் புதிய எண்ணங்களோடு பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஆவல் கொள்வோமாக. விடைபெறும் ஆண்டு உலகம் முழுவதும் கொரோனா அச்சத்தினால் மக்களை அல்லல் படுத்திய ஆண்டாக வரலாற்றில் பதியப்பட்டு விட்டது. என் செய்வோம், இயற்க்கையை யாரால் வெல்ல முடியும்?

கடவுள் உலகத்தை சிந்திக்க வைப்பதற்கு கண்ணுக்குத் தெரியாத கிருமியை அனுப்பியுள்ளார் போலும். கிரகத்திலும் வாழ்வோம் என இறுமாப்புக் கொண்ட மனிதனுக்கு கொரோனா எச்சரிக்கை செய்து விட்டது. உலகம் அச்சத்தில் மூழ்கியுள்ளது. சமய வரலாறுகளில் நோய்கள் பற்றிய செய்திகள் உண்டு. யுகங்கள் தோறும் இயற்கையின் சீற்றங்களாலூம் நோய்களின் சீற்றங்களாலும் மக்கள் அழிவதும் அவலமுறுவதும் வழக்கமாகும். அனுபவத்தின் வாயிலாக மனித வாழ்வை செம்மைப்படுத்துவதற்கு இத்தகைய சூழ்நிலைகள் காலத்திற்கு காலம் ஏற்பட்டு வருவதனை நாம் காணலாம்.

எனவே அன்பு உறவுகளே, புதிய அனுபவத்தோடு புதிய ஆண்டை நாம் சந்திக்க போகிறோம். பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து, மனிதாபிமானத்தை வளர்த்து, வாழ்நாளை செம்மைப் படுத்த வேண்டியது எங்களின் தலையாய கடமையாகும். செல்வந்தநாடு, வறியநாடு, கல்வியில் உயர்ந்தநாடு என்றெல்லாம் நாம் பிரித்து ஆராய்வது உண்டு. ஆனால் இயற்கை எந்த வேறுபாடுமின்றி எல்லோர்க்கும் ஒரே நீதியை வழங்குகின்றது. தண்டிக்கின்ற போதும் தன் தண்டனையை பாரபட்சமின்றி வழங்குகின்றது. இதற்கு கொரோனா நல்ல உதாரணம். எனவே மாபெரும் சக்தியாகிய இறைவனுக்கு மதிப்புக் கொடுத்து எல்லோரும் வாழவேண்டும என்ற உயர் பண்போடு நாம் வாழ்வோம். புதிய ஆண்டில் நல்ல திடசங்கற்பத்தை மனதில் இருத்தி செயற்படுவோமாக.

எங்கள் இலங்கைத் திருநாட்டில் தர்மம் நிலைக்க வேண்டும் என்று அனைவரும் பிராத்தனை செய்யுங்கள். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று' என்பதை அரசியல் வாதிகள் நன்கு உணரவேண்டும். ஒரு நாட்டின் தலைவன் பாரபட்சமின்றி அனைத்து மக்களையும் வழிநடத்த வேண்டும். இந்த அழகிய நாட்டில் எல்லோரும் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழலாம். உண்மையான மனித நேயம் உருவாகுமானால் வேற்றுமைகள் மறைந்துவிடும். என் செய்வோம், எங்கள் தமிழ் இனத்திடம் ஒற்றுமை என்பது கிடையாது. இதனால் நாம் இழந்தது ஏராளம். தன்தன் சுயலாபத்திற்காக பல்வேறு கட்சிகள், பல்வேறு குழுக்கள் எனத் தோற்றம் பெற்று காலம் வீண்விரயமாகின்றது. எவரும் வெளிச்சத்தில் இல்லை. எவரிடமும் சத்தியத்தை காணமுடியவில்லை. புதிய ஆண்டில் கடவுளிடம் மன்றாடுவோம். எங்கள் இனத்திற்கு நல்ல விமோசனம் கிடைக்க வேண்டும் என்று. கடந்த மார்ச் மாதம் முதல் பள்ளித்தலங்கள், பல்கலைக்கழகங்கள் கொரோனா சூழ்நிலையால் சீராக செயற்படவில்லை. எங்கள் இளம் சமுதாயம் இதனால் பல பாதிப்புக்களை சந்திக்க நேரிட்டுள்ளது. இதன் பாதிப்பை சமூகம் விரைவில் உணரும். புதிய ஆண்டில் இழந்த கல்விக் காலத்தையும் மீட்டெடுக்க வேண்டிய தேவை உண்டு. கல்வி சமூகம் சுறுசுறுப்பாக இயங்கி எதிர்கால சந்ததியை காப்பாற்ற வேண்டும்.

அன்பர்களே! அஞ்சாதீர்கள். புதிய ஆண்டில் நோய்களின் வேகம் தணியும். நாம் அஞ்சாது அறவழியில் வாழ ஆயத்தமாவோம். மருத்துவ சமூகம், விஞ்ஞான சமூகம் நல்ல பணியைத் தொடரட்டும். இறைவன் எங்களை மன்னித்து காத்தருள்வாராக, எல்லா சமயத்தவர்களும் பிறருக்கு இடையூறின்றி வாழ்வதை கற்றுக் கொடுக்க வேண்டும். புதிய ஆண்டு நல்ல வண்ணம் மலர ஒன்றுபட்டு பிரார்த்திப்போம்.

**'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல**

**பொல்லா வினையறுக்க'என்ற ஞான வாக்கை அனைவரும் அறிவர்.**

எனவே 2021ஆம் ஆண்டு நல்ல வண்ணம் அமையப் பிரார்த்திப்போம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறம் வெல்லும்; அநீதி தோற்கும்

## அமைச்சர் டக்ளஸ் புத்தாண்டுச் செய்தி



பிறக்கும் புத்தாண்டு, அன்பும் அறமும் எங்கும் நிலவும் புதிய யுகம் நோக்கி மலரட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்து செய்தியில், அவர் தெரித்துள்ளவை வருமாறு:-

அழகார்ந்த உரிமை வாழ்வை எண்ணி காத்திருக்கும் எமது மக்கள் பிறந்து வரும் ஒவ்வொரு புத்தாண்டு மலர்விலும் தமது கனவுகள் வெல்லப்படும் என்ற நம்பிக்கையில் மட்டுமேபுத்தாண்டு மகிழ்ச்சியை கொண்டாடி வருகிறார்கள்.

ஆனாலும், இதுவரை காலமும் எமது மக்களின் கனவுகளை நிறைவேற்றாமல் மாற்றங்களுக்கு மாறாக வெறும் ஏமாற்றங்களையே ஒவ்வொரு புத்தாண்டும் எமது மக்களுக்கு தந்து விட்டு கடந்து போயிருக்கின்றன.

எமது மக்கள் விரும்பும் அழகார்ந்த உரிமை வாழ்வென்பது வெறுமனே அரசியலுரிமை தீர்வை நோக்கியது மட்டுமல்ல, மாறாக, இலங்கைத்தீவில் வாழும் சகல சமூக மக்களும்

அனுபவிக்கும் அபிவிருத்தி, அன்றாடப் பிரச்சிகளுக்கான தீர்வு போன்று தமிழ் பேசும் மக்களும் சகல உரிமைகளும் பெற்று வாழும் சமத்துவ சமுதாயமொன்றின் கனவுகளே எமது விருப்பமாகும்.

ஓர் இனத்தின் உரிமைகள் தங்கமாகவும், இன்னொரு இனத்தின் உரிமைகள் தகரமாகவும் இருவேறாக இருப்பதை நாம் ஒரு போதும் ஏற்றுக. கொள்ளப்போவதில்லை.

சகல இன,மத,சமூக மக்களுக்கும் சமவுரிமை என்ற சமத்துவமான அழகிய இலங்கைத் தீவையே நாம் விரும்புகின்றோம்.

அழகிய எங்கள் தமிழர் தேசம் அபிவிருத்தியால் நிமிர்ந்தெழ வேண்டும். வேலை வாய்ப்பற்ற எமது இளைஞர், யுவதிகளின் கனவுகள் யாவும் நிறைவேற வேண்டும். வீடற்றும், நிலமற்றும் வாழும் எமது சொந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். வறுமையில் இருந்து விடுபட்டு வளமான வாழ்வை எமது மக்கள் அனுபவிக்க வேண்டும்!.

தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் சிறை மீண்டு வர வேண்டும். காணாமல் போனோரின் உறவுகளின் கண்ணீருக்கு பரிகாரம் தேட வேண்டும். சாத்தியமான வழிமுறையில் நீண்ட கால அரசிலுரிமை பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியில் உருவான அரசியல் மாற்றம் போல் தமிழ் மக்கள் மத்தியிலும் உருவாகும் மாற்றம் ஒன்றினால் மட்டுமே இவைகள் சாத்தியமாகும்.

(15ஆம் பக்கம் பார்க்க)






# புத்தாண்டில் வாழ்த்தி மகிழ்கிறேன் எம் காலைக்கதிரே என்றுமே வளர்க!

காலைக் கதிரே காலைக் கதிரே
கண்ணிய முள்ள காலைக் கதிரே
நாளுமே நல்ல செய்திகளை சொல்லும்
காலைக் கதிரே காலைக் கதிரே

மூலை முடக்கு தேடிப் பிடித்து
முக்கிய செய்திகளை தந்து நிற்கும்
ஈழ மண்ணில் ஈடிணை இல்லா
காலைக் கதிரே காலைக் கதிரே

வித்தியின் புத்தி மின்னலாய் மின்ன
கொட்டிடும் மழையால் குவிந்திடும் பொக்கிஷம்
செப்பிடும் பழமொழி சிந்தையில் நிறைந்திட
தந்திடும் உன்னை வந்தனை செய்கிறேன்

புலம்பெயர் நாட்டில் புலர்ந்திட முன்னர்
நலந்திகழ் இதழாய் வந்துமே நிற்பாய்
மின் இதழாக வேகமாய் வந்திடும்
உன் பெருவழியில் நடக்கிறார் பலபேர்

எழுத்திலே புதுமை கருத்திலே புதுமை
எதிரியும் நண்பரும் இணைத்திடும் புதுமை
காலையில் கதிராய் தோன்றிடும் உன்னை
மாலையில் காணவும் வழியினை வகுத்தாய்

கன்னல் தமிழினைத் தந்திடும் இதழாய்
கருத்தாய் ஆங்கிலம் பகர்ந்திடும் இதழாய்
சொல்லால் உறைக்கும் சுவைதரும் கலையால்
எல்லாம் நிறைந்தாய் என்றுமே வளர்வாய்

புத்தாண்டில் நீயும் புத்தெழிச்சி பெறுக
சுற்றிநிற்கு மிடர்கள் தொலைந்துமே போக
எத்திக்கும் வாழ்த்து வந்துமே குவிக
எம் காலைக்கதிரே என்றுமே வளர்க



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# 2021
# புத்தாண்டே உன் வரவால் புது வாழ்வு மலர்ந்திடட்டும்!

புத்தாண்டே நீ வருக
புதுத்தென்பை நீ தருக
சுற்றிநிற்கும் தொல்லையெலாம்
துரத்தவே நீ வருக

நோய் என்னும் பெயராலே
பேய் ஒன்று வந்ததனால்
காய்தல் உவத்த லின்றி
கலங்கி நின்றார் மக்களெலாம்

வெள்ளம் ஒரு பக்கம்
வெந்தணலோ மறு பக்கம்
உள்ளம் பதை பதைக்க
உழன்று நின்றார் மக்களெலாம்

மதிப்பார்ந்த கலைஞர் பலர்
மண்ணை விட்டுப் போனார்கள்
மதிப்பு மிக்க பெரியோரும்
மண்ணை விட்டுப் போனார்கள்

முதலாளி முடங்கி நின்றார்
தொழிலாளி கலங்கி நின்றார்
விவசாயி உணர் விழுந்து
வேதனையைத் தொட்டு நின்றார்

உயிர் காத்த மருத்துவர்கள்
உழைத்து நின்ற செவிலியர்கள்
உயிர் கொடுத்த துயரமது
உளம் உறைந்து நிற்கிறதே

வெடி குண்டு கலாசாரம்
விழுங்கியது பல உயிரை
உடல் சிதறி பலவுடல்கள்
உருக் குலைந்து கிடந்தனவே

கோயில் என்று பார்க்காமல்
குழந்தை என எண்ணாமல்
பாதகரின் ஈனச் செயல்
பதை பதைக்க வைத்ததுவே

துயர் நிறந்த காலமதன்
நினை வகற்ற வந்துவிடு
துன்ப மெனும் இருளதனை
போக்கி நிற்க வந்துவிடு

சாந்தியைக் கொண்டு வா
சமாதானம் கொண்டு வா
சோர்ந்து நாம் போகாமல்
துணிவுதனைக் கொண்டு வா

புது வெளிச்சம் புத்தூக்கம்
எடுத்து நீ வந்துவிடு
புத்தாண்டே உன் வரவால்
புது வாழ்வு மலர்ந்திடட்டும்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# புத்தூக்கமுடன் புலரட்டும் புத்தாண்டு!

புத்தூக்கமுடன் புலரட்டும் புத்தாண்டு
காலைக் கதிரொளியில்
புத்தாண்டை வரவேற்போம்
நம்பிக்கை ஒளி ஏற்றும்
நற்செய்களால் நானிலம் மகிழ
நல்லோர் நட்புறவுகளால் இணைந்து
நம்தேசத்தில் நற்சமூகம் மலர
புதுயுகம் மகிழ்ந்திடும்
புத்தாண்டு மலரட்டும்

புதிய பாதையில் புதிய பயணங்கள்
புத்தூக்கமுடன் புலரட்டும்
புன்னகையோடு புதிய உறவுகள்
மலரட்டும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

செ.யோசப்பாலா,
(செயலாளர்,
கத்தோலிக்க கலை
இலக்கிய வட்டாரம்)










With Best Compliment From .....
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
THE SASIKA DRIVING SCHOOL
TSL
சசிகா லேணர்ஸ்
L
Reg. No - DS882
"அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை"
THE SASIKA LEARNERS
முறைமையான சாரத்தியத்தை கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
CHOOSE RIGHT WAY
தலைமைக்காரியாலயம்
இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7578/ 7678
077 6140361, 077 722 6247
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
யாழ் மத்தி (Twon) 021 222 8004 070 3015004
சாவகச்சேரி 021 227 0616 071 557 0616
மல்லாகம் 021 224 3393 070 301 3014
நெல்லியடி 021 226 0999 071 775 0999
சங்கானை 021 225 1664 070 301 3016
காரைநகர் 021 225 2454 070 510 2484
பண்டத்தரிப்பு 021 225 2333 071 255 4135
வேலணை 021 221 5472 070 301 3012


இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
Flash Super Detergent
தன்னிகரற்ற யாழ் உற்பத்திகள்
HI CLEAN ™
கொரோனாவில் இருந்து நம்மைப் பாதுகாத்திட...!
186/11 பவர்லூம் வீதி, கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
077 8444951
Hi Clean Jaffna
607 A, கே.கே.எஸ். யாழ்ப்பாணம்.
021 222 2855


Wish you a Happy New Year
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
* One Year Warranty for all Electronic Parts.
* Life Time Free Service Warranty.
* Free water Testing.
* Freely Available Spare Parts.
* 24 Hours Breakdown Service.
Offer Price
Rs. 27,000/=
38,000/=
SEDIMENT FILTER 6PCS FREE
SMART
எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு
நீங்கள் உங்கள் அயலவர்கள், நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியப்படுத்தி அவர்களும்
எமது Water Filter பொருத்தினார்கள் என்றால். அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய
Sediment Filter (6 pcs) இலவசமாக தரப்படும்.
YARL SMART Water Solution (Pvt) Ltd
No.341 K.K.S Road, Jaffna. | 021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com





அண்மையில் குடாநாட்டில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஊறணி - புத்தூர் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள 105 குடும்பங்களுக்கும் கனேடிய தமிழ் மெடிக்கல் அசோசியேசன் (Canada Tamil Medical Association (CTMA))இன் நிதி உதவியுடன் யாழ்ப்பாணம் ரொட்டறிக் கழகத்தினால் 3,500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.






# இனி ஒரு விதி பிறக்கும் 2021

அன்று

வானிலே கண்டதோ விடிவெள்ளி
வந்ததோ இறை தூதன்

வரலாற்றின் புதுமுகம்
வாழ்விலோ அதிசயம்

கீழ்த்திசை வானில் கோடிட்ட வெள்ளி
காட்டி மறைந்ததோ
கிறிஸ்துவின் பிறப்பை

காலத்தை வென்ற
காவலன் பிறப்பு
கலிலேயாவின் பெத்தலகேமில்
பொத்தல் வெளிகளில்

இடையர் மத்தியில்
இடையூறுகளின் நடுவே

சித்தத்தில் இறை உணர்வு
மொத்தத்தில் மெசியாவின் தோற்றம்
சத்தத்தில் கேட்டதோ ... வானவர் கீதம்
அல்லேலூயா .... அல்லேலூயா

வாழ்த்திசை இங்கு ஒலிக்க
கீழ்த்திசையில் மூவர்
பல்தசார், கஸ்பார், வெளிச்சோர் என்பார்
மேல்திசை தேடி வந்தார்

யாரேனும் உதவுவரென்று
ஏரோதின் நிழல் நாடி
பாராளப் பிறந்த கிறிஸ்து
பரமனின் செய்தி கேட்டார்

வஞ்சக நெஞ்சன் ஏரோதன்
நஞ்சினை கருத்தில் வைத்து - இறை
பிஞ்சினை அறிய வேண்டி
கெஞ்சினான் காரியத்தை

வெள்ளியும் பாதை காட்ட
ஞானியர் தொழுவம் நாடி
உள்ளிட்ட பக்தியுடன்
பொன்னோடு , தூபம்
வெண் போளத்தோடு

உண்மையின் உத்தமனை
உருகியே வணங்கி நின்றார்
திரும்பாத ஞானியர் கண்டு
தீராத கோபம் கொண்டு
அரும்புகளை அழிக்க
அளித்தானே கொடும் கட்டளையை
பெத்தலகேம் எங்கும்
இரத்தத்தின் வாடை
மழலைகள் மரணம்
மாதர்கள் கண்ணீரில் சரணம்

அதிகார ஏரோதனோ
சதியிலும் தோற்று நின்றான்

விதியை வெல்ல நினைத்து
மதியிலே மழுங்கிப் போனான்

சகிப்புள்ள திருக் குடும்பம்
எகிப்துக்கு ஏகிச் சென்று
சுகித்தது இறை அருளில்
மகிழ்ந்தது இறை கருணையால்

இன்றோ

கிருமியோடு பிறந்த கிறிஸ்துமஸ் இது
பொருமிப் பொருமி - தொலைந்த
அருமைகளை நினைக்கின்றோம் - மறந்த
பெருமைகளில் வாழ்கிறோம்

தெருவுக்குத் தெரு முகக் கவச மானிடர்கள்
உருவும் மறந்து உள்ளமும் நொந்து
அருவும் திருவும் அகிலத்தை ஆழ
வரும் துன்பத்தை வாழ்க்கையில் சகிக்கிறோம்.
கடுப்பாகிப்போன வாழ்க்கையில்
தடுப்பூசி மட்டும் இன்னும்
எடுப்பாகத் தெரிகிறது
விடுப்பில்லை விடையிது விரைவில் தெரியும்

2021இல் இனி ஒரு விதி பிறக்கும்
தனி ஒருவர் அல்ல நாம்
தங்கி நிற்போம் விழுதுகளாக

தூங்கிய சமூகத்தின்
துக்கங்களை விரட்டி
தூக்கங்கள் களைத்து
தேங்கிய நல் உணர்வுகளில்
நாளை வாழ்ந்திருப்போம்!

●ரவி அமிர்தன்

## அபிவிருத்திக்கான ஆண்டாக புது வருடத்தை மாற்றுவோம்!

### அங்கஜன் எம்.பி. வாழ்த்துச் செய்தி



சவால்களை முறியடித்து, அபிவிருத்திக்கான ஆண்டாக 2021ஆம் ஆண்டினை மாற்றியமைப்போம் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தனது ஆங்கில புத்தாண்டு தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டானது இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் செழிப்பானதும், மகிழ்ச்சிகரமானதுமான ஆண்டாக அமைய எனது வாழ்த்துக்கள்.

நாட்டு மக்களுடைய நம்பிக்கையையும், எதிர்பார்ப்பினையும் நிறைவேற்றும் ஆண்டாக அமையும் அதேவேளையில் அபிவிருத்திக்கான ஆண்டாகவும் இவ்வாண்டு அமையும் என நம்புகிறேன்.

பிறந்துள்ள இப்புதுவருடமானது உலக மக்கள் அனைவருக்கும் சவால் மிக்கது. உலகமே கொரோனா எனும் கொடிய நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் கூட்டாக பண்டிகைகளைக் கொண்டாடாது சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இவ்வருடம் கொரோனா எனும் கொடிய நோயின் பிடியில் இருந்து நாட்டு மக்களை விடுவிக்க இத் தருணத்தில் திடசங்கற்பம் கொள்வோம்.

கடந்த வருடம் எமக்கு பல படிப்பினைகளைத் தந்திருக்கிறது. அந்தப் படிப்பினைகள் ஊடாக எம்மை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். – என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.









ப்ரியமதா பயஸ்

# நம்பிக்கை ஊட்டாத ஆண்டாக மலர்கிறது



மூன்றாம் ஆயிரமாம் ஆண்டான 2021 ஆம் ஆண்டு இன்று உதயம் ஆகிறது, பல்லாயிரம் நினைவுகளை புதித்து விட்டு கடந்து செல்கிறது 2020 ஆம் ஆண்டு .

2021 ஆம் ஆண்டு ஆனது கிரிகோரியின் நாள் காட்டியின்படி வெள்ளிக்கிழமையில் தொடங்கும் ஒரு சாதாரண ஆண்டாக ஆரம்பிக்கிறது .

இது கி.பி. 2021ஆம் ஆண்டு என்றும் அழைக்கப்படும், அதேபோல இது மூன்றாம் ஆயிரமாம் ஆண்டின் 21ஆவது ஆண்டாகவும், 21ஆம் நூற்றாண்டின் 21ஆவது ஆண்டாகவும் இருக்கும். அத்துடன் இது 2020களின் இரண்டாவதுமான ஆண்டாகவும் இருக்கபோகிறது.

உலகப் பொருளாதாரம் பலத்த அடி வாங்கியிருக்கின்ற 2020ஆம் ஆண்டு அதே நிலமையையே 2021 ஆம் ஆண்டுக்கும் விட்டு செல்கிறது . இந்த




அடியிலிருந்து மீள பல வருடங்கள் எடுக்கலாம்.

2008 – 2009 காலகட்டத்தில் உலகம் சந்தித்த நிதி, பொருளாதாரச் சிக்கலை விட மிக மோசமான நிலை 2021 ஆம் ஆண்டிலும் உருவாகும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகப் பரவலான கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பொருள்களின் தேவையை ஒட்டிய பற்றாக்குறையும் விநியோகமும் அதிர்ச்சியளிக்கும் விதத்தில் பின்னடைவைக் கண்டுள்ளன.

சீனாவின் பொருளாதார வீழ்ச்சி, மறைமுகமாகப் பல நாடுகளைப் பாதித்துள்ளது.இலங்கை இந்தியா உட்பட ஆசிய நாடுகள் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் நெருக்கடியை இந்த ஆண்டில் நாம் சந்திப்பது பெரும்பாலும் தவிர்க்க முடியாததாக இருக்




கும் என அஞ்சப்படுகின்றது.

உலகளவில் பெருந்தொகையானவர்கள் தமது வேலை வாய்ப்புகளை இழந்து இருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட நெருக்கடிச் சூழ்நிலை இன்னமும் சுமுகமான நிலைக்கு வராத வேளையில் பிறக்கும் இந்த 2021ஆம் ஆண்டு உலகின் இன்னொரு பெரிய சவாலாகி இருக்கின்றது.

வேலையில்லாப் பிரச்சினை உலக நாடுகளைப் பெரும் சவாலுக்கு உள்ளாக்கி அச்சுறுத்துகின்றது. இது கொரோனா நோயின் பெரு நெருக்கடியில் சிக்கி இன்னமும் இரண்டு மடங்காகி இருக்கிறது .

கடந்த 21வருடங்களில் இல்லாதவாறு, எண்ணெய் விலை அதள பாதாளத்திற்கு இறங்கியிருக்கின்றது. தேவையை விட அதிகமான கையிருப்பை வைத்துக் கொண்டு எண்ணெய் உற்பத்தி நாடுகள் திணறுகின்றன. 2021ஆம் வருடமும் இது தொடர்ந்தால், பொருளாதாரம் ஆட்டங்காணும்.

உலகளவில் மிக மோசமான பாதிப்பைக் கண்டுள்ள சுற்றுலாப் பயணத்துறை பெரிய சவாலை எதிர்நோக்குகின்றது. நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் இன்றும் பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தாத நிலையில், விமானச் சேவைகள் பெருமளவு நிறுத்தப்பட்டும் பலர் பணிநீக்கம் செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

உலகளவில் தலை குப்புற விழுந்துள்ளது உல்லாசப் பயணிகள் வருகை. உலகெங்கும் உல்லாசப்



பயணத்துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றிருப்பவர்களில் 54 வீதமானவர்கள் பெண்கள். இவர்களின் பொருளாதாரம் பேரதிர்ச்சியை சந்தித்திருப்பதோடு, அடுத்தடுத்த வருடங்கள் சவாலுக்குரியதாகவும் மாற்றியிருக்கின்றது.

உணவு உற்பத்தியும், விநியோகமும் நெருக்கடிப்பட ஆரம்பித்திருக்கின்றன. உலகுக்கே உணவு வழங்கும் விவசாயிகள் வயிற்றில் ஓங்கி அடித்திருக்கின்றது கொரோனா.

பழைய உணவு உற்பத்தியும், சங்கிலித் தொடராக வரும் விநியோகமும், அடுத்த வருடம் பெரும் சவால்களை எதிர்நோக்கபோகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை.

2020ஆண்டில்யாருமேஎதிர்பார்க்காதகொரோனா வைரஸ் உலகையே ஆட்டிப்படைத்து அதன் தொடர் இலங்கை போன்ற நாடுகளில் இப்போதுதான் அதி தீவிரதன்மையைக் கண்டிருக்கிறது .

இன்று வரையும் தொழிற்சாலைகள் முடங்கி இருக்கின்றன. அரச கரும பீடங்கள் இன்னமும் இயல்புநிலைமைக்கு திரும்பவில்லை. தொழிலாளர்கள் அனைவரினதும் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்ட நிலைமை இன்னமும் தொடர்கிறது. பல வளர்ந்த மேலை நாடுகள் கூட பல மருத்துவர்கள் இருந்தும் கொரோனா வைரஸுக்கு சிகிச்சை கொடுக்க முடியாமல் திணறுகின்றன. அங்கு பல்லாயிரம் மனிதர்கள் இறந்து போனார்கள்.

இவ்வளவு வேகமாக எந்த ஒரு காலத்திலும் ஒரு நோய்க்கான மருத்துவ சிகிச்சையை பல விதங்களில் முயற்சி செய்திருக்க மாட்டார்கள்.

ஒரு தடுப்பூசி என்பது அவ்வளவு வேகமாகக் கண்டுபிடித்து, பல்வேறு கட்ட சோதனைகளை நடத்தி, நடைமுறைப்படுத்த இவ்வளவு சுறுசுறுப்புடன் இது வரை இப்படி முயற்சிகள் நடந்ததில்லை. இந்த ஆண்டுகுள்ளேயே பல்வேறு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்



பட்டு, பல் கட்ட சோதனைகள் நடத்தி, தடுப்பூசி போடுகின்ற திட்டமும் பலநாடுகளில் ஆரம்பித்த ஆண்டாகவும் 2020 ஆம் ஆண்டுதான் அமைந்திருந்தது .

அதே போலத்தான் பல நாடுகளில் நிரம்பி வழிந்த ஹோட்டல்களும் கேளிக்கை விடுதிகளும் கேட்பாரற்று, ஆள் அரவமின்றி நாள்களைக் கழித்து முடித்திருக்கின்றன .

சுற்றுலாத்துறை கொரோனாவை உலகளவில் பரப்பும் துறையாக மாறியதால் சுற்றுலாவை நம்பி இருக்கின்ற பல்வேறு தொழிலாளர்களும் பல்வேறு நிறுவனங்களும் வேறு என்ன செய்வது என்று திகைத்துபோய் கொரோனாவுக்கான விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை ஆராய தொடக்கி இருந்தமை கழிந்த 2020 ஆம் ஆண்டில்தான் என்பது பெரும் உண்மை .

ஜனநாயகத்தின் உச்சகட்டமாக அமெரிக்காவில்



அமெரிக்க அதிபர் தேர்தல் சமூக ஊடகங்களின் வாயிலாக எல்லாதரப்பு மக்களாலும் வேடிக்கை பார்க்கப்படும் பொருளாகவும், பேசப்படும் பொருளாகவும், மாறியதும், சாதாரண நிலையில் இருக்கும் மக்கள் கூட அமெரிக்காவின் ஜனநாயகத்தை பார்த்து தங்களுடைய கருத்துக்களை சமூக ஊடகங்களில் பதிவிடும் மாற்றங்களையும் கூட 2020 இல் கண்டோம்.

ஒன்லைன் வியாபாரங்கள் இலங்கையில் ஆக்கிரமித்த விதம் கொரோனாவால் வந்த பயன்தான். மரக்கறி தொடக்கம் – மாசிக் கருவாடுவரை ஒன்லைனில் ஓடர்செய்துவாங்கும்முறையின்மூலமாகபொருள்களை வாங்குவதும்,சேவைக்கான பணத்தை செலுத்துவதும் ஒன்லைன் மூலம் மிகப்பரவலாக இலங்கையில் பரவ ஆரம்பித்துள்ளது. இது 2021ஆம் ஆண்டுக்கும் நிலைபெற்றுச் சென்றுள்ளது.

ஆக 2021ஆம் ஆண்டு என்பது புதிய ஆண்டாக பிறக்காமல் 2020 ஆம் ஆண்டின் தொடராக தன்னை இணைத்துள்ளமைதான் உலக மனித சமூகம் செய்திருக்கின்ற பாவம் வெளிப்படுகின்ற விடயமாக இருக்கிறது .ஆக மொத்தத்தில் 2020 இன் நெருக்கடிகளைத் தொடரப் போகின்ற – அவநம்பிக்கை தரும் ஆண்டாக 2021 இன்று பிறந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஈழத்துச் சிதம்பரமும் திருப்பனந்தாள் மடமும்

**ஈழத்துச் சிதம்பர யாத்திரை – 09**

வே.வரதசுந்தரம்

**முந்தை மாலொடு முண்டகன் கண்டிலா**
**அந்தணாளன் சிற்றம்பலத் தாடுவான்**
**வந்து திண்ண வளம்பதி மேவிய**
**சுந்தரேசனின் தூவடி சூடுவாம்**

தில்லைச் சிற்றம்பலத்தான் திண்ணபுரம் எழுந்தருளி சைவமக்களுக்கு அருள்பாலிக்கும் பாங்கினையும், காரைநகரார் சுந்தரேசன் திருவடிமலர்களை தலையிற் சூடிவணங்கும் பண்பினையும் கூறும் இப்பொருள் பொதிந்த பாடலைப்பாடும் அடியார்கள் ஈழத்துச் சிதம்பரத் திருத்தலத்துக்கும் தமிழகத்தில் உள்ள திருப்பனந்தாள் திருமடத்துக்கும் இடையேயுள்ள தொடர்பினை அறிகின்றனர்.

ஈழத்துச் சிதம்பரத் திருத்தலப் புகழைத் தரணிக்கு எடுத்தியம்பும் அருமந்த நூல் காரைநகர் கார்த்திகேயப் புலவர் பாடிய திண்ணபுர அந்தாதி என்று கண்டோம். இந்நூல் திருப்பனந்தாள் மடத்தின் ஆதரவில் வெளியிடப்பட்டது. திருப்பனந்தாள் காசிமட அதிபர் கயிலை மாமுனிவர் வித்துவான் திருவாளர் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகளின் திருவுளப்பாங்கின் வண்ணம் இந்நூல் வெளியிடப்பெற்றது. திருப்பனந்தாள் மடத்தின் குமரகுருபரர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1985ம் ஆண்டு இந்நூல் வெளிவந்தது.

இந்த நூலுக்குத் திருப்பனந்தாள் காசிமடஅதிபர் கயிலைமாமுனிவர் திருவாளர் திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழங்கியஅருளுரை இதோ:

‘உலகம் உய்ய எழுந்த அருளாளர்கள் பாடிய அருட்பனுவல்கள் காலவெள்ளத்தில் நிலைத்து நிற்பவை. அவற்றின் சொல்லும் பொருளும் இறைவனும், இறைவியுமே. ஆதலின், அவை மந்திரங்களாகவே ஓதி உணர்வதற்குரியவை. வினைநீக்கமும், சிவப்பேறும் அளிக்கும் விழுப்பொருள்களாக அவை விளங்குகின்றன.

இத்தகைய அருளாளர்கள் பாடிய அருட்பனுவல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது. ‘திண்ணபுரஅந்தாதி’ என்ற இந்த நூலை யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேயப் புலவர் பாடியுள்ளார். நம்மன்பர் சிவநெறிச்செல்வர் ஒய்வுபெற்ற நல்லாசிரியர் காரைநகர் சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் இதனைக் காசிமடம் குமரகுருபரர் அச்சகத்தில் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று விழைந்த வண்ணமே இந்நூல் திருவருள் துணையால் அச்சிடப் பெற்று திருவாதிரைத் திருநாளில் மலர்கிறது’.

இதனைத் தொடர்ந்து இத்தலத்துக்கு யாத்திரை மேற்கொண்ட சிவனடியார்கள் திருப்பனந்தாள் காசிமடம் பற்றியும், அதன் அதிபர் கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் பற்றியும் அறிய விழைவது இயல்பன்றோ?

குமரகுருபர சுவாமிகளால் காசியில் குமாரசாமி மடம் நிறுவப் பெற்றது. இவருக்குப் பின்னர் வந்த சீடபரம்பரையினரே திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவினர். சொக்கநாத சுவாமிகள், அருணாசல சுவாமிகள், அம்பலவாண சுவாமிகள், சடையப்ப



கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்.

சுவாமிகள் என்போரே குமரகுருபர சுவாமிகளின் சீடபரம்பரையினர். இவர்கள் 1620 தொட்டு 1720 காலப்பகுதியைச் சார்ந்தவர்கள். இதுஒரு நூற்றாண்டுக் காலமாகும்.

1625இல் பிறந்து 1688ல் முத்திபெற்ற குமரகுருபரர் சைவஉலகுக்கும் தமிழ் இலக்கியஉலகுக்கும் பாரிய பங்களிப்புச் செய்தவர். கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மைபிள்ளைத்தமிழ், நீதிநெறிவிளக்கம், சகலகலாவல்லிமாலை, கயிலைக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பரமும் மணிக்கோவை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம் எனப்பன்னிரண்டு நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்துபோயினர். இவர் பாடிய திருமுருகாற்றுப்படை, கந்தர்அனுபூதி, கந்தர் கலிவெண்பா என்பன முருகன் முந்நூல் என்று போற்றப்படுபவை. இவற்றை முருகன் அடியார்கள் சிறந்த பாராயண நூல்களாகப் போற்றுவர். தற்போதைய திருப்பனந்தாள் அதிபர் கயிலைமாமுனிவர் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் 1960இல் இளவரசராக நியமனம் பெற்றார். 12 ஆண்டுகள் சென்றதும் அருணந்தி சுவாமிகளின் முத்திக்குப் பின்னர் 16.05.1972இல் குருப்பட்டம் தரித்தார்.

பாடல்பெற்ற 274 திருத்தலங்களில் 272 திருத்தலங்களைத் தரிசித்த பாக்கியம் உடையவர். இவர் கயிலாய தரிசனமும் பெற்றவர். திருப்பனந்தாள் காசிமட அதிபர்களுள் கயிலை யாத்திரை செய்யும் வண்ணம் அருள்பெற்றவர் இவர் மட்டுமே என்பதால் சுவாமிகளை தருமையாதீன சந்நிதானம் ‘கயிலை மாமுனி’ என்று அழைத்துப் பெருமை சேர்த்தது. தமிழகத்தில் உள்ள மூன்றாவது பெரிய மடம் திருப்பனந்தாள் காசித்திருமடம். திருவாடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் ஆகியவை முதலாம், இரண்டாம் இடங்களை முறையே வகிக்கின்றன. இது அகில இந்திய மடம்.

அடுத்து சிவனடியார்கள் காரைநகர் மக்கள் ஒட்டிப் பிறவா இரட்டையர்கள் பற்றி நிறையவே பேசுவது கேட்டு வியப்படைகின்றனர். இரண்டு நாகபாம்புகளும், இரண்டு காளைகளும் ஒட்டிப் பிறவா இரட்டையர்களாக இங்கு இருந்தமை பற்றி அறிகின்றனர்.

பார்வதி என்ற பெண் கோயிலுக்குச் சொந்தமான தோட்டத்தில் புல்செதுக்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகாமையில் தென்னைமரத்தில் இருந்து தேங்காய் ஒன்று வீழ்கிறது. பார்வதி எழுந்து நின்று நான்கு பக்கங்களும் மிகக் கவனமாகப் பார்க்கிறாள். எவரையும் காணவில்லை. தேங்காயை எடுத்துப் புல்லுக் கடகத்துள் வைத்து, அதன்மேல் புல்லைப் போட்டு தேங்காயை மறைத்துவிடுகிறாள். பின்னரும் புல்லுச் செதுக்குகிறாள். செதுக்கிய புல்லையும் எடுத்துக் கடகத்துக்குள்ளே போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போக எழுந்து வருகிறாள்.

கோயில்மணி ‘டாண்,டாண்’ என்று கேட்கிறது. உடனே புல்லுக் கடகத்தை ஓரிடத்தில் வைத்து விட்டுச் சுவாமி தரிசனஞ்செய்யக் கோயிலுக்குள்ளே செல்கிறாள். அவள் போனபின்பு அம்பலவிமுருகனின் ஆப்த நண்பனும் கோயில் பாதுகாவலனுமாகிய கூழையன் என்ற நாகபாம்பு புல்லுக்கு மேலேயேறிச் சுருண்டுகொண்டு உல்லாசமாகப் படுத்துக் கொண்டது.



காசிமடம் - திருப்பனந்தாள் நிறுவுனர் குருமுதல்வர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

பூசை முடிந்ததும், விபூதி வாங்கிப் பூசி, சந்தனப் பொட்டிட்டுக்கொண்டு மிகுந்த குதூகலத்துடன் புல்லுக் கடகத்தடிக்கு வருகிறாள் பார்வதி. புல்லுக்குமேலே பாம்பு படுத்திருப்பதைக் கண்டு திடுக்குறுகிறாள். அவள் சத்தம் செய்கிறாள். மணலை அள்ளிப் பாம்பின் மேலே வீசுகிறாள். தடியொன்றினால் கடகத்தில் தட்டுகிறாள். பாம்பு அசையவில்லை. சிறிய தூரத்துக்கு அப்பால் அம்பலவிமுருகர் தம்மை மறந்த நிலையில் திருவாசகத்தைப் பாடிக்கொண்டிருக்கிறார்.

‘ஐயா! புல்லுக் கடகத்தில் பாம்பு படுத்திருக்கிறது. துரத்திவிடுங்கள்’என்று குரல் கொடுத்தாள். ஆனால் பார்வதியின் சொற்கள் அவர் காதுகளில் ஏறவில்லை. பின்னர் அம்பலவிமுருகருக்குக் கிட்டச்சென்றாள் பார்வதி. ‘ஐயா,பாம்பு புல்லுக் கடகத்திற் கிடக்கிறது’ என்றாள். இப்போதும் பழைய நிலைதான். இரண்டு நாழிகைகள் கழிந்துவிட்டன. அம்பலவிமுருகரின் திருவாசகப் படிப்பு முடிந்துவிட்டது.

‘ஐயா! நீண்டநேரமாக இங்கே நிற்கிறேன்!’ என்றாள். ’என்ன சமாச்சாரம்? என்றார் அவர். ‘கடகத்தில் உள்ள புல்லுக்குமேலே பாம்பு படுத்திருக்கிறது. துரத்திவிடுங்கள்’ என்றாள். ‘நீ ஏதோ பிழைசெய்துவிட்டாய்’ என்றார் அவர். ‘நான் ஒரேயொரு தேங்காய்தான் எடுத்துப் புல்லால் மறைத்து வைத்திருக்கிறேன்’. இப்படிக் கூறினாள் அவள். ‘தேங்காயை மெல்ல எடுத்து வெளியே போடு’. இது அவரிட்ட கட்டளை. ‘கடகத்துக்குள்ளே தேங்காய். தேங்காய்க்கு மேலே புல்லு. புல்லுக்குமேலே பாம்பு. எப்படி ஐயா தேங்காயை எடுப்பது?’ இப்படி ஏங்கினாள் அவள்.

‘கூழையா!இறங்கிக் கீழேவா’ இப்படி அவர் கூறியதுதான் தாமதம். கூழையன் புல்லுக் கடகத்தை விட்டுக்கீழே இறங்கி ஊர்ந்து அப்பாற் செல்கிறது. பார்வதி தேங்காயை எடுத்துச் சுவாமி வாயிலில் வைத்துவிட்டுப் புல்லுக் கடகத்துடன் வீட்டுக்குப் போகிறாள். இவ்வாறு கூழையன், வாலன் என்று இரு நாகங்கள் இத்தலத்தில் இருந்தன. இவை சிவமுருகருடன் நட்புப் பூண்டு கோயிலை, கோயிற் பொருள்களைப் பேணிப் பாதுகாத்தன. இப்பாம்புகளுக்குப் பெயரிட்டு அழைத்தவரும் சிவமுருகரே. இந்நாகங்கள் இரண்டும் கோயிலெங்கும் உலாவிய பொழுதும் யாருக்கும் எவ்விததீங்கும் இழைத்தனவல்ல. கள்வரை மட்டும் துரத்தும். களவு எடுத்த பொருளை மீண்டும் அவ்விடத்தே வைக்குமாறு செய்யும். இவ்வாறு களவு செய்து பிடிபடுவோர் பின்னரும் அவ்வாறு செய்யார். திருந்தி விடுவர். ’ஆங்குத் தீயரும் நல்லவர் ஆயினர்’.

அவ்வாறே, சிவமுருகர் இருகாளைகளைத் தோழன் போன்று வளர்த்தார். அவ்விரண்டு காளைகளையும் சங்கரன், கந்தன் என்று பெயரிட்டு அழைத்தார். திருக்கோயிற் பணியின் போது, கல்லினாற் செய்யப்பட்ட தூண்களையும், மரத்தினால் உருவான தூண்களையும, வண்டிகளில் இக்காளைகள் இரண்டும் இழுத்துச் சென்றன. சிற்றூண்டி, பேருண்டி தவிர்த்துத் தண்ணீர்த் தாகத்தையும் பாராதுகோயிற் திருப்பணிக்கு உதவின.

கூழையன், வாலன் என்ற இருபாம்புகளை ஒட்டிப்பிறவா இரட்டையர்களாகப் பார்க்கிறோம். சங்கரன்,கந்தன் என்னும் இருகாளைகளையும் ஒட்டிப் பிறவா இரட்டையர்களாக அவ்வூர் மக்கள் பார்க்கிறார்கள். இதேபோன்று வைரவர் சூலமும், ஐயனார் விக்கிரகமும் ஒட்டிப்பிறவா இரட்டையர் ஆயின. அவ்வாறே ஐயனார் கோயிலும், சிவாலயமும் ஒட்டிப் பிறவா இரட்டையர் ஆயின.

(தொடரும்...)

# முட்டியது இரணைமடு வான் கதவுகள் திறப்பு



வடமாகாணத்தின் நீர்ப்பரப்பால் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக்குளம் இன்று வியாழக்கிழமை அதிகாலை அதன் கொள்ளவான 36அடியை தாண்டியதன் காரணமாக அதிகாலை 5.00மணிளவில் 14 வான் கதவுகளில் 6 வான்கதவுகள் 6அங்குலத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் மழை வீழ்ச்சியைப்பொறுத்து மேலும் கதவுகள் திறக்கப்படலாம் எனவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிக்கிறது. தாழ் நிலப்பகுதி மக்கள் விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தலை அரசு நடத்தாமலிருக்கவே தீர்மானம்!

## சுசில் பிரேமஜயந்த கருத்து

கொழும்பு, ஜன.01

கொவிட்- 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலிருக்கவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் இரண்டு பிரதான விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும் என தொலைநோக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகத் தற்போது பேச்சு முன்னெடுக்கப்படுகிறது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தின்முதல்அலையை அரசாங்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதால் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் கொவிட் - 19 வைரஸ் இரண்டாம் அலை குறுகிய காலத்துக்குள் தீவிரமடைந்துள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டுமாயின் இரண்டு பிரதான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்ற பிரச்சினை காணப்படுகிறது. கடந்த அரசாங்கம் தேர்தல் முறைமையில் முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது.

தேர்தல் முறைமை தொடர்பாக முரண்பாடற்ற தீர்மானத்தைப் பெற பல்வேறு தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்க வேண்டும். ஆகவே அதற்கான கால அவகாசம் போதாது. அத்துடன் மாகாண சபை தேர்தலை கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் நடத்த முடியாது. ஆகவே நெருக்கடியான சூழ்நிலையிலும் மாகாண சபை தேர்தலை நடத்தாமலிருக்கவே தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார் நிலை!

2024 இல் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதற்கு முன்னர் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களும் இடம்பெறவுள்ளன. எந்த தேர்தலானாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தற்போது தயாராகவுள்ளது என்று அதன் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கடந்த 19 ஆம் திகதி பண்டாரவலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு யாதெனில் சர்வாதிகார தலைமைத்துவம் என்பதாகும்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு மிகவும் ஜனநாயக ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளது. பலரது பரிந்துரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது அனைவரதும் இணக்கப்பாடு கவனத்தில் கொள்ளப்படும். எந்தவொரு தீர்மானமும் தன்னிச்சையாக எடுக்கப்பட மாட்டாது.

பொதுத் தேர்தலின் போது தற்காலிக யாப்பொன்றின் ஊடாகவே போட்டியிட்டோம். எனினும் தற்போது கட்சிக்கான ஸ்திரமான யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் தேர்தல்களில் திட்டமிட்ட வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இதற்கு முன்னர் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல் என்பவற்றுக்கும் முகங்கொடுக்க நேரிடும். எந்த தேர்தலானாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தற்போது தயாராகவுள்ளோம்.

தற்போது நாட்டு மக்களுக்கு காணப்படும் ஒரேயொரு மாற்று வழி ஐக்கிய மக்கள் சக்தியும் , சஜித் பிரேமதாஸவும் மாத்திரமேயாகும். கட்சி யாப்பு எதிர்காலத்திற்கு ஏற்ற வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இன, மத பேதம் இன்றி நிறுவப்பட்டுள்ளது. இலங்கையின் தனித்துவத் தன்மையை பொதுவாக ஏற்றுக் கொண்ட யாப்பாக எமது யாப்பு அமைந்துள்ளது.

இதன் சின்னம் தொலைபேசி என்பதில் மாற்றமில்லை. எனினும் ஐக்கிய மக்கள் கூட்டணிஏனையகட்சிகளுடன்இணைந்து அமைக்கப்படும். எனினும் அது தொடர்பில் இன்னும் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

தற்போது எம்முடன் இணைந்து செயற்படுகின்ற அனைத்து கட்சிகளும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்து அதில் அங்கத்துவம் வகிக்க தயாராகவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க மாத்திரம் அவரது கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகள் என்பது மக்களின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது அவை ஜனாதிபதிகளின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் மூலம் முன்னெடுக்கப்படுகிறது. தொடர்ந்தும் இதற்கு அனுமதிக்க முடியாது.

வடக்கு,கிழக்கில் காணப்படும் அதிகார பிரச்சினைக்கான தீர்வாகவே இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. இதனை அரசாங்கத்தால் தனித்து நீக்க முடியாது. - என்றார்.

# மஹர சிறைச்சாலை சம்பவங்கள்; பூரண அறிக்கை நீதி அமைச்சரிடம்!

மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பாக கண்டறிய நியமிக்கப்பட்ட குழுவின் பூரண அறிக்கை நீதி அமைச்சர் அலிசப்ரியிடம் குழுவின் தலைவியால் நீதி அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது.

மஹர சிறைச்சாலையில் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தை அடுத்து, அதுதொடர்பாக தேடிப்பார்க்க முன்னாள் மேல் நீதிமன்ற நீதியரசர் குசலா சரோஜினி தலைமையில் 5 பேர் கொண்ட குழு நீதி அமைச்சர் அலிசப்ரியால் கடந்த மாதம் 29ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த 7ஆம்திகதி கையளிக்கப்பட்ட நிலையில் பூரண அறிக்கை நேற்று கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்போது நீதி அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்:-

கடந்த மாதம் 29 ஆம் திகதி மஹர சிறைச்சாலையில் இடம்பெற்றது துரதிஷ்டவசமான சம்பவமாகும். இந்த சம்பவத்தை விஞ்ஞான ரீதியிலும் மனிதாபிமான அடிப்படையிலுமே பார்த்தோம்.

இவ்வாறான சம்பவம் ஏன் இடம்பெற்றது என்பதை தேடிப்பார்த்து, அதற்கான காரணங்களை அறிந்து, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கே 5 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்திருந்தோம்.

அந்தக் குழு ஒருவாரத்தில் இடைக்கால அறிக்கையை கையளித்திருந்தது. இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தோம். தற்போது பூரண அறிக்கை கையளிக்கப்பட்டிருக்கின்றது. அறிக்கையை நன்கு ஆராய்ந்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் நாங்கள் சுயாதீன குழுவொன்றையே நியமித்தோம். அதில் நாங்கள் எந்தவகையிலும் தலையிடவில்லை. அவர்கள் சுயாதீனமாக செயற்பட்டிருக்கின்றனர். இவ்வாறான சம்பவம் ஏன் இடம்பெற்றது என்ற உண்மையை நாங்கள் கண்டறியவேண்டி இருக்கின்றது.

அத்துடன் சிறைச்சாலைகளில் இடம்பெற்றுவரும் நெருக்கடி நிலையை குறைப்பதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்துடன் கலந்துரையாடி வழக்கு நடவடிக்கைகளை வீடியோ தொழில்நுட்பம்ஊடாகமேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அதேபோன்று நீதிவான் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும் சிறைச்சாலைகளின் நெருக்கடியை கட்டுப்படுத்துவதற்காக இதுவரை போதைக்கு அடிமையாகி இருந்த கைதிகள் 8 ஆயிரத்தி 500 பேரை பிணையில் விடுதலை செய்திருக்கின்றோம். பாரிய சிறைச்சாலை கட்டடதொகுதி ஒன்றையும் நிர்மாணிக்க இருக்கின்றோம். - என்றார்.






# கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1986.11.21 | பிறந்த திகதி - 1979.05.09 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - புனர்பூசம் 4 | நட்சத்திரம் - உத்திராடம் |
| செவ் - 08 இல் | பாவம் - 25 3/4 |
| கல்வி - டிப்ளோமா கணனி | கல்வி - பட்டதாரி |
| தொழில் - கம்பனி கணனி இயக்குனர். | தொழில் - விரிவுரையாளர் |
| எதிர்பார்ப்பு - அரச தொழில் | எதிர்பார்ப்பு - பட்டதாரி தொழில் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# யாழ் மேயரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.மேயர் வி.மணிவண்ணன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தி வருமாறு: –

2021ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. இந்நாளில் அனைவருக்கும் அனைத்தும் கிடைத்து, வளமான வாழ்வியல் மலர்ந்து, ஒளிமயமான வாழ்க்கையை தமிழருக்கு இப்புத்தாண்டு வழங்கட்டும்.

அத்துடன் எமது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கான நீதி எனத் தமிழினம் படும் இன்னல்களுக்கு விடிவு கண்டிடவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் யாரும் இல்லை என்ற நிலை அடையவும், பெண்களின் வாழ்வு உயரவும், அறிவுசார் சமுதாயத்தை உருவாக்கவும், தமிழினம் பல சிறப்புகளைப் பெற்றிடவும் இப்புத்தாண்டில் உறுதியேற்போம்.

இன்றைய காலத்தின் நிலையறிந்து உலகத்தை அச்சுறுத்தி கொண்டிருக்கும் கொரோனா என்ற பெருந்தொற்று நோய் பரவுதலை கட்டுப்படுத்தும் நோக்குடனான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, இப் புத்தாண்டை அமைதியாக கொண்டாடி மகிழ்வோம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். – என்று உள்ளது.


## அன்பொளி கல்வியகம்

கல்வியாண்டு – 2021

தரம் 3, தரம் 4, தரம் 5 Zoom வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இணைய விரும்பும் மாணவர்கள் 076 174 7490 எண்ணுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...!

HIKVISION Mega Store
No 1 Worldwide CCTV and Video Surveillance

கிக் விஷன் மெகா ஸ்ரோர்

வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)



உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.

நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்

HIKVISION



Hot Line -021 222 7126

077 473 6057
077 2871 841
077 899 2923
hikvisionmegastore@gmail.com

இல - 164, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
164, Palaly Road,
Thirunelvely, Jaffna

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

Beetel Lanka
Courier Service




| | |
|---|---|
| லண்டன் | - 1000 |
| சுவிஸ் | - 1250 |
| கனடா | - 1300 |
| பிரான்ஸ் | - 1100 |
| ஜேர்மன் | - 1100 |
| டென்மார்க் | - 1100 |
| பெல்ஜியம் | - 1100 |
| கொலன்ட் | - 1100 |

★ எண்ணை, மருந்து, கருவாடு, கறிவேப்பிலை போன்ற பொருள்கள் அனுப்பி வைக்க முடியும்.

★ கொரோனா பெருந்தொற்றினால் அல்லல்படும் எமது உறவுகளுக்காக விசேட விலைக்கழிவு

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

272, K.K.S road,
Jaffna

021 222 8591 / 077 774 1117

A Complete Printing Solutions

உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்...

MATHI COLOURS

CUSTOMER CARE
077 722 2259

WE OFFER A WIDE RANGE OF SERVICES FROM
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | DESIGNING | COLOUR SEPARATION
BINDING | COLOUR PRINT & ALL KIND OF PRINTING SERVICE

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல் சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான

ஓர் அச்சுக்கூடம்!

மதி கலர்ஸ்



வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA. TEL : 021 222 9285 | E-mail : mathicolours@gmail.com

# தேர்தலுக்கு அஞ்சுகின்றது அரசு ஐக்கிய மக்கள் சக்தி கடும் சாடல்

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. எனினும், அவற்றைத் தீர்ப்பதற்கு ஏதுவான வகையில் மக்களால் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், அதனைக் காலம் தாழ்த்துவதிலிருந்து அரசு தேர்தலுக்கு அஞ்சுகின்றமை தெளிவாகின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் மக்கள் மத்தியில் காணப்பட்ட வர்க்க வேறுபாட்டு பிரச்சினைக்கு வழங்கப்பட்ட தீர்வே மாகாண சபை முறைமையாகும். இது வரலாற்று ரீதியான மிகவும் முக்கியத்துவமுடைய விடயமொன்றாகும். இந்தப் பிரச்சினையின் காரணமாக நாட்டில் 30 வருட கால போர் நடைபெற்றது. எனினும், தற்போது அதற்குத் தீர்வொன்று வழங்கப்பட்டுள்ளது.



மாகாண சபை முறைமை உருவாக்கப்படுவதற்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், எதிர்ப்பை வெளியிட்டவர்களே மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதில் அதிகாரத்தையும் கைப்பற்றியது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது திருத்தம் அல்ல, '13 பிளஸ்' கொண்டுவரப்பட வேண்டும் என்றார். ஆனால், தற்போதைய நிலைவரத்தைப் பார்க்கும்போது 13 பிளஸ் அல்ல, 13 ஆவது திருத்தம் கூட கிழித்தெறியப்பட்டு விடுமா என்று தோன்றுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் பற்றிப் பேசினாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். இதன் மூலம் உள்ளகப் பிரச்சினை காணப்படுகின்றது எனத் தோன்றுகின்றது.

பிரதமரின் நிலைப்பாட்டில் ஜனாதிபதி இல்லை. மாகாண சபை முறைமை தொடர்ந்தும் செயற்படுத்தப்படுமா அல்லது இல்லாமலாக்கப்படுமா என்று அரசிடம் கேட்கின்றோம். இதனை அரசு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எல்லை நிர்ணயப் பிரச்சினை காணப்படுகின்றது என அரசு கூறியது. தற்போது மக்களால் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். எனவே, பிரச்சினைக்குத் தீர்வை வழங்கக்கூடிய அதிகாரம் காணப்படுகின்ற போதிலும் அரசு அதனைச் செய்யாதிருப்பதன் மூலம் தேர்தலுக்கு அஞ்சுகின்றது என்பது தெளிவாகின்றது – என்றார்.

## கொரோனா குணமடைவு 34 ஆயிரத்தை கடந்தது!

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 698 பேர் பூரணமாக குணமடைந்து கடந்த (புதன் கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 34 ஆயிரத்து 623 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரையில் 42 ஆயிரத்து 63 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 7 ஆயிரத்து 245 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 195 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறம் வெல்லும்; ......

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாற்றத்தை நோக்கி மக்கள் பயணிக்க தொடங்கிவிட்டனர். ஆனாலும், சட்டியில் இருந்து வாய்க்கு கிடைப்பதற்கு மாறாக, சட்டியில் இருந்து நெருப்பில் விழுந்து கருகி விடும் மாற்றம் அர்த்த பூர்வமானது அல்ல.

மாபெரும் அர்ப்பணங்களையும், தமிழர் தேசத்தின் நெடுங்கனவை வெல்ல நாம் எதிர்கொண்ட தியாகங்களையும், வலிகளையும், வதைகளையும் எமது மக்கள் நெஞ்சில் ஏந்தி மாற்றங்களை நோக்கி பயணிக்க முன் வரவேண்டும்.

இனி வரும் காலங்களில் மக்கள் வழங்கும் ஆணையில் மட்டுமே பிறந்து வரும் புத்தாண்டுகள் யாவும் தமிழர் தேசத்தில் புதிய விடியலை பிறப்பிக்கும்.

இன முரண்பாடுகள் தீரவும், இன சமத்துவம் மலரவும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நியாயங்கள் நிலைக்கவும், கொடிய நோய் பிணிகள் யாவிலும் இருந்து விடுபட்டு எல்லா மனித உயிர்களும் இன்புற்று வாழவும் பிறந்திருக்கும் இப்புத்தாண்டை சரிவரப்பயன்படுத்துவோம்.

- இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, அறம் வெல்லும், அநீதி தோற்கும் என்றும் வருந்துயர் யாவும் எம்மை கடந்தே செல்லும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாஸா தகனம், அடக்கம் செய்வது தொடர்பில் மதத் தலைவர்கள் அவசரப்படத் தேவையில்லை!

### வாசுதேவநாணயக்கார இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, ஜன.01

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற விடயத்தில் மதத் தலைவர்கள் அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. இந்த விடயத்தில் அவர்கள் கூறுகின்றமையை விட மருத்துவர்கள் கூறுகின்றமையைக் கேட்டு அதற்கேற்ப செயற்படுவதே பொருத்தமானதாக இருக்கும் என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற ஆளுங்கட்சி தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இந்த விடயம் தொடர்பில் கேட்ட போதே இதனைக் கூறிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –



**கேள்வி:** பௌத்த மதத் தலைவர் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று கூறுகின்றார்களே...?

**பதில்:** மதத் தலைவர்கள் கட்சித் தலைவர்கள் அல்லர்.

**கேள்வி :** கொவிட் மரணங்கள் தொடர்பில் தகனம் செய்வதா அடக்கம் செய்வதா என அரசாங்கத்துக்கு எதிராக மதத் தலைவர்களால் கடுமையான எதிர்ப்பு வெளியாகின்றதே..?

**பதில் :** இல்லை. அவ்வாறு எதுவும் இல்லை. தகனம் அல்லது அடக்கம் தொடர்பில் பௌத்த மதத் தலைவர் இவ்வளவு அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் மருத்துவர்கள் கூறும் விடயமே முக்கியத்துவமுடையதாகும். அதற்கமையவே செயற்பட முடியும்.

**கேள்வி :** எனினும் அவர்கள் தம்மால் தான் இந்த அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுகின்றார்களே..... ?

**பதில் :** இந்த விடயத்தில் மதத் தலைவர்கள் கூறுகின்றமையை விட மருத்துவர்கள் கூறுகின்றமையை கேட்பதே பொருத்தமானமதாக இருக்கும். – என்றார்.






## தினம் ஒரு விவசாய தகவல்கள்

### விவசாய இரசாயனங்கள் தொடர்பான சட்டங்கள்



✻ பீடை கொல்லிகள் விற்பனை நிலையங்களில் விவசாய இரசாயன விற்பனை தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்களை பயிற்றுவித்தல் மற்றும் பதிவு செய்தல் தொடர்பாக ஒழுங்கு விதி ஆகும்

✻ பீடைகளை கட்டுப்படுத்தும் சேவை நிலையங்களுக்கு அனுமதி பத்திரம் பெறப்பட வேண்டும். என்பதுடன் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் நடைமுறை மற்றும் அதனுடன் தொடர்பாக ஏனைய கட்டளைகளை உள்ளடக்கிய ஒழுங்கு விதியாகும்.

✻ சகல பீடைகொல்லி விற்பனைக்கும் ஒரு பற்றுச்சீட்டு ஒன்று வழங்கப்பட வேண்டும்

✻ விற்பனை நிலையங்களில் உள்ள பீடை கொல்லிகள் தொடர்பான தொகை அறிக்கை பேணப்படல் வேண்டும்

✻ 18 வயதிலும் குறைவானவர்களுக்கு பீடை கொல்லி விற்பனை செய்யக்கூடாது

✻ உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் கட்டிடம் ஒன்றில் பீடை கொல்லி பொருட்கள் விற்பனை செய்யப்படும் ஆயின் குறித்த பகுதிக்கு வாயுப் பரிமாற்றம் அடையமுடியாதனவாக காணப்பட வேண்டும் என்பதனை குறிப்பிடும் ஒழுங்கு விதியாகும்.

✻ பீடை கொல்லி அடங்கிய சகல கொள்கலன்களிலும் காணப்படும் பெயர் சுட்டியில் உள்ளடங்க வேண்டிய விவரங்களும் பாவனை மட்டுப்படுத்தப்படுள்ள பீடை பெயர் சுட்டிகளில் அது தொடர்பாக அச்சிடலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பீடைக்கொல்லிகளை விற்பனை தொடர்பாக கட்டளைகள் அடங்கி ஒழுங்கு விதியாகும்.

ர.ரஜீவன் விவசாய பட்டதாரி







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2021இல் வெளியிடப்பெற்றது.